கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்
மறை வளர ஒன்றிணைவோம்

# தாய்



கத்தோலிக்க சஞ்சிகை - ஆரம்பம் 1997

2024 பங்குனி – சித்திரை தாய்–28 சேய்–164












## சிலாபம் மறைமாவட்டத்துக்கு புதிய ஆயர்

## மேதகு டொன் விமல் சிறி ஜயசூரிய

02.03.2024

## ஆண்டவர் உயிர்த்துவிட்டார் - அல்லேலூயா!

வெளியீடு – கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம். தொ.பே (0094) 777 289960 விலை–70/-


Nixon Miralee
Quality is Everyone's Responsibility
Nixon Miralee
NM

# தாய் THAAI
## எமது எண்ணம்

March - April 2024
P.O. Box: 1233, Colombo
Mobile: 077 7289960
e.mail:anandapulle@yahoo.com
anandapulle@hotmail.com
www.colombostjosephvazmandram.lk


ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பானது எங்களுடைய விசுவாச வாழ்வின் அடிப்படையாக இருக்கின்றது. இந்த அடிப்படையில் தான் எங்களுடைய முழு கிறிஸ்தவ வாழ்வும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஆண்டவர் ஒருவேளை உயிர்க்கவில்லையென்று சொன்னால், எங்களுடைய விசுவாசம் ஒரு கேள்விக்குறியான விசுவாசமாகவே இருந்திருக்கும். ஆகவே ஆண்டவருடைய உயிர்ப்பை நம்புகின்ற மக்களாக, ஆண்டவர் எங்களோடு இருக்கின்றார் என்ற நம்பிக்கையில், தொடர்ந்து உயிர்ப்பின் மக்களாக வாழ முயற்சி செய்வோம். தவக்காலத்தினூடாக நாங்கள் பெற்ற அனைத்து பயிற்சிகள் வழியாக செப,தவ, ஒறுத்தல் முயற்சிகள் அனைத்தையும் எங்கள் வாழ்நாள் முழுவதும் நாங்கள் அவற்றை கடைப்பிடித்து உயிர்த்த கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக வாழ முயற்சி செய்வோம்.

மேலும் பாஸ்கா குண்டு தாக்குதலுக்கு இவ்வருடம் ஐந்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. விசேடவிதமாக இத்தாக்குதலில், இறந்த அனைவருக்காகவும் மன்றாடுவோம். அதேபோல இந்த தாக்குதலில் காயப்பட்டு உடல் உபாதைகளுக்கு உள்ளாகி வேதனைப்படும் ஒவ்வொருவருக்காகவும் மேலும் உறவுகளை இழந்து தவிக்கும் அனைவருக்காகவும் மன்றாடுவோம்.
விசேடவிதமாக இவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டுமென்று சொல்லி இரக்கத்தின், நீதியின் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

அத்தோடு மே மாதம் அன்னை மரியாளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட வணக்க மாதமாகும். இந்த மாதத்திலே விசேட விதமாக குடும்பமாக இணைந்து செபிக்க நாங்கள் முயற்சி செய்வோம். இன்றைய காலத்திலே அருகிக் கொண்டு வருகின்ற ஒரு விடயமாக இருப்பது குடும்ப ஜெபமாலை. கூடி ஜெபிக்கின்ற குடும்பம் கூடி வாழும். இன்று எங்கள் குடும்பங்களிலே பலவிதமான பிரச்சனைகள் முக்கியமாக பொருளாதார பிரச்சினையை முன்னிலைப்படுத்தி பலவிதமான பிரச்சினைகள் எங்களை சூழ்ந்துள்ளது. இந்தப் பிரச்சினைகள் அனைத்திற்கும் எங்களது குடும்ப ஜெபம் நிச்சயமாக ஒரு தீர்வாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு அன்னை மரியாளுடன் ஒரே குடும்பமாக இணைவோம். பரபரப்பான இந்த உலகத்திலே எங்களுக்கு பலவிதமான தேவைகள் இருக்கின்றது. இருந்தாலும் நேரம் ஒதுக்கி ஜெபிக்க முழு மனதோடு, 24 மணித்தியாலத்தில் ஏதோ ஒரு நேரத்தை ஒதுக்கி முடிந்தளவு குடும்பத்தில் அனைவரும் ஒன்றிணைந்து ஜெபிக்க முயற்சி செய்வோம்.

சிலாப மறை மாவட்டத்தை பொறுப்பெடுத்திருக்கும் புதிய ஆயர் அதிவணக்கத்திற்குரிய டொன் விமல் சிறி ஜயசூரிய அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு அவர்களின் பணி வாழ்வு சிறப்புற இறைவனை பிரார்த்திக்கின்றோம். அத்தோடு இரத்தினபுரி மறை மாவட்டத்திற்காக புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் தேர்வுநிலை ஆயரான அதிவணக்கத்திற்குரிய வயமன் குரூஸ் அடிகளாருக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, அவர் தொடங்கவிருக்கும் பணியானது சிறப்பாக அமைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.


## தாய் நிர்வாகம்

**பிரதம ஆசிரியர்**
அருட்பணி. ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே
☎ : 0777 289960

**ஆசிரியர்**
அருட்பணி. ஒனாசியஸ் பெர்னாண்டோ
☎ : 0770 090005

**சஞ்சிகை நிர்வாகம்**
திருமதி. டயனா ரமேஸ் - ☎ : 0775 594399
JVM சிரேஷ்ட பெண்கள் குழு

**சஞ்சிகை நிர்வாக ஒருங்கிணைப்பாளர்**
திரு. எனஸ்டன் பெர்னாண்டோ -☎ : 0774 985940
✉ : enestons@gmail.com

**துணை ஆசிரியர்கள்**
திருமதி. சுமதி கோமஸ் - ☎ : 0773 672113
திரு. ஜெயக்குமார் பெர்னாண்டோ - ☎ : 0777 781275

**கணனி வடிவமைப்பு**
JRCA Digital Graphics (PVT) LTD
(Mr. Ferdinand Devota)

**இணையத்தளம்**
www.colombostjosephvazmandram.lk

# இயேசுவின் உயிர்ப்பு நமதாகட்டும்

## - ஆன்மா -

“கிறிஸ்து உயிருடன்
எழுப்பப்படவில்லை
என்றால்
நாங்கள் பறைசாற்றிய
நற்செய்தியும்
நீங்கள் கொண்டிருக்கிற
நம்பிக்கையும்
பொருளற்றதாயிருக்கும்”
(1 கொரி 15:14)

திருவழிபாட்டு ஆண்டு ஒன்றினுள் நாம் கொண்டாடுகின்ற பிரதானமான இரண்டு மறை உண்மைகள் உண்டு.

**1.** இயேசுக்கிறிஸ்துவின் மனிதவதாரம் இதற்காக ஆயத்தம் செய்யத் தரப்பட்டுள்ள திருவருகைக்காலம். மனிதவதார மறைநிகழ்வை கொண்டாடும் போது நாம் இயேசுக்கிறிஸ்துவை எம் வாழ்வின் ஒளியாக ஏற்றுக் கொள்கிறோம்.

“அனைத்து
மனிதரையும்
ஒளிர்விக்கும்
உண்மையான
ஒளி உலகிற்கு வந்து
கொண்டிருந்தது”
(யோவான் 1:9)

**2.** இயேசுக்கிறிஸ்துவின் பாஸ்கா விழா உயிர்ப்பு விழா. தனது பாடுகள் மரணம் உயிர்ப்பு வழியாக இயேசு கொண்டு வந்த முழு மனித விடுதலை.
இதற்காக நாம் ஆயத்தம் செய்யத் தரப்பட்டிருக்கின்ற தபசு நாட்கள், தவக்காலம். இயேசுவின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடும் போது இயேசுவை நாம் உயிர்த்தெழுதலும் வாழ்வுமாக ஏற்றுக் கொள்கிறோம்.

“உயிர்த்தெழுதலும்
வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை
கொள்பவர் இறப்பினும்
வாழ்வார்”
(யோவான் 11:25)

மனிதப்பார்வையிலே நாம் வாழ்வைப்பற்றிப் பேசுகின்ற போது, நமது வாழ்வை இவ்வுலக வாழ்வோடு முடித்துவிடுகின்றோம்.

### கடவுள் மனிதனுக்குப் படைப்பிலேயே உடல், ஆன்மா, உயிர் தந்தார்.


மனித உடலில் இருந்து உயிர் பிரிந்து நம் உடல் மண்ணுக்கு கையளிக்கப்படுவதோடு எல்லாம் நிறைவுற்றது என்று கவலைக்கு மேல் கவலையோடு நம்பிக்கை இழந்தும் விடுகின்றோம். ஆனால் நம் வாழ்வு இவ்வுலகு சம்பந்தப்பட்டது அல்ல மாறாக முற்றும் முழுதும் மறுவுலகிற்கு உரியது.
இதை எப்பொழுதும் எமக்கு நினைவூட்டவே கடவுளின் தெய்வீகத்தைத் தாங்கி நிற்கும் **ஆன்மா** தரப்பட்டிருக்கிறது.

இயேசு இந்த உலகத்திற்கு வந்ததன் நோக்கமே பாவத்தினால் படுகுழிக்குள் தள்ளப்பட்ட மனுக்குலத்தை, நம் ஆன்மாவை சேர்ப்பதற்கேயாம். அவர் வந்த நோக்கமும், போதித்த போதனைகளும், இறுதியிலே மாசு மறுவற்ற செம்மறியாக இருந்து தம் சொந்த இரத்தத்தை சிலுவையில் சிந்தி செய்த மாபெரும் புதுமை, சாதனை என்னவென்றாலும் நமது ஆன்மீகத் தண்டனையை நீக்கி, விண்ணக வாழ்விற்கு அழைத்துச் சென்றமையாகும்.

இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பைத் தியானித்துக் கொண்டாடும் நமக்கு விடுக்கப்படும் செய்தி யாதெனில், நாம் அனைவரும் விடுதலையின் மக்கள். ஏற்கனவே இயேசு ஆண்டவர் நமது பாவத்திற்கான கடன் சீட்டை சிலுவையில் தொங்கி செலுத்திவிட்டார். புனித பேதுரு இதை மேற்கோள் காட்டுகிறார்.

“உங்கள்
மூதாதையரிடமிருந்து
வழிவழியாய்
வந்த வீணான
நடத்தையினின்று
உங்களை விடுவிக்கக்
கொடுக்கப்பட்ட
விலை என்னவென்று
உங்களுக்குத்
தெரியும். அது
பொன்னும்
வெள்ளியும் போன்று
அழிவுக்குட்பட்டது அல்ல;
மாறாக மாசு மருவற்ற
ஆட்டுக்குட்டியைப்
போன்ற கிறிஸ்துவின்
உயர்மதிப்புள்ள
இரத்தமாகும் ”
(1 பேதுரு 1: 18-19)

எனவே பயணிக்கும் இப்பாஸ்கா நாட்களில் மனதில் உறுதிபூணுவோம் நாம் விடுவிக்கப்பட்ட மக்கள். நம் வாழ்வு பரலோகத்திற்கு உரியது. எனவே மேலுலகு சார்ந்தவற்றை நாடவும், ஊனியல்பின் இச்சைகளுக்கு விடுபட்டவர்களாக நாம் இயேசுவோடு இறந்து உயிர்பெற்றிருக்கிறோம் என்பதை எம் செயல்களில் காட்டிடுவோம். நாம் பெற்றுக்கொண்ட நற்செய்தியும், நாம் கொண்டிருக்கும் விசுவாசமும் உயிர்த்த இயேசுவிலே தான் எனும் உறுதியோடு பயணிப்போம். ஊனியல்பை களைந்து தூய வாழ்வை அணிந்து கொள்வோம்.
“உயிர்ப்புநமதாகட்டும்”



அருட்தந்தை
**Frank Duff IVDei**

“நீர் புறப்பட்டுப்போம். உம் மகன் பிழைத்துக் கொள்வான்.” (யோவான் 4: 50)

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு 5 ஆண்டுகள்

-21.04.2019-

ஜோர்ஜ்

வெள்ளையரிடம் இருந்து சுதந்திரம் பெற்றோம் என்று மகிழும் நாம் உண்மையிலேயே நாம் சுதந்திரம் பெற்றுள்ளோமா? என்பது ஒரு கேள்விதான் .

நம் நாட்டு அரசியல் ஒரு சூதாட்டமாக மாறி இருப்பது கடந்து வந்த 76 ஆண்டுகளில் காணக்கூடியதாக உள்ளது. பொய் வாக்குறுதிகள் கொடுத்து ஆட்சியைப்பிடிப்பது.
மொழி வேற்றுமை, மத வேற்றுமை ஏற்படுத்தி ஆட்சியைப் பிடித்தல் நம் நாட்டின் அரசியல் கலாச்சாரமாக மாறி இருக்கிறது.

இக் கலாச்சாரம் எப்போது மாறும். 30 ஆண்டுகளாக நடந்த இனப் போர் ஒரு அரசியல் சூழ்ச்சி என்பது இப்போது தெளிவாக உள்ளது. அதே போக்கில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலையும் நோக்கலாம். யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன தீர்வு? இன்னும் அது கேள்வியாக உள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று, இந்த வருட ஏப்ரல் மாதம் 21ம் திகதியோடு 5 ஆண்டுகள் பூர்த்தியாகின்ற நிலையில் திருச் சபைத்தலைவர்கள் கேட்டு நிற்பது இந்த தாக்குதலுக்கு பொறுப்பு யார்? இக் கேள்விக்கு பதிலே இல்லை. எம் பேராயர் மல்கம் கருதினால் ரஞ்ஜித் ஆண்டகை அவர்கள் இந்த 5 ஆண்டுகளாக உள்நாட்டு அளவிலும், சர்வதேச அளவிலும் குரல் கொடுத்து வருவது தெரிந்ததே.
அன்றைய குண்டுத் தாக்குதலில் மூன்று தேவாலயங்களிலும், மூன்று ஹோட்டல்களிலும் 280க்கும் அதிகமான மனித உயிர்களை காவு கொண்டு, இன்னும் பல நூற்றுக் கணக்கானவர்களுடைய வாழ்வை முட மாக்கிய இந்தத் தாக்குதலின் 5வது ஆண்டு பூர்த்தியாகும் நிலையில் இதனை மக்களோ மறக்கவில்லை. நீதியின் நிமித்தம் குரல் எழுப்புவதை நிறுத்தவும் இல்லை.

இவ் ஆண்டு சித்திரை 21ம் திகதி கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் காலையில் விஷேட நிகழ்வுகளும், மாலையில் நீர்கொழும்பு கட்டுவாபிட்டிய










செபஸ்தியார் ஆலயத்தில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் ஒன்று கூடும் ஊர்வலமும் நடைபெற உள்ளது.


உயிர் இழந்தவர்களுக்காக செபிப்போம். அவர்களை

## நம்பிக்கையின் சாட்சியாளர்கள்

எனும் நிலைக்கு உயர்த்த வேண்டும், அவர்கள் ஆலயத்திற்கு வந்தது. அவர்களுடைய விசுவாசத்தின் நிமித்தமே. ஆகவே மறை சாட்சிகள் என்பதை விட, விசுவாசத்திற்கு சாட்சிகளாக இருந்தார்கள் என திருச்சபை அங்கீகரிக்குமாறு கேட்க முயற்சிகள் நடைபெற்று வருகிறது.

செபிப்போம், செயல்படுவோம், எமது நாட்டின் நிலை மாற வேண்டும், அநியாயமாகக் கொல்லப்பட்டவர்கள், சிறைப்படுத்தப்பட்டவர்கள், அனைத்தையும் இழந்தவர்கள், நாட்டை விட்டு செல்ல வேண்டிவந்தவர்கள், அங்கவீனமானவர்கள் மற்றும் தனிமையில் வாடுகின்றவர்கள். அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டும்.

நாமும் எமது நாட்டில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும் அலசி ஆராய்ந்து, புரிந்து கொள்ள பழகுவோம். தற்காலத்தில் எமது நாட்டில் தேர்தல்கள் வர இருப்பதால் அதற்காக புதிய புதிய நாடகங்கள் மேடை ஏற்றப்படலாம், மக்கள் மனம் மாற நம் அரசியல் வாதிகள் செய்யாதது ஒன்றுமில்லை. நம் அரசியல் புதிதாக்கப்பட வேண்டும். நீதி நேர்மை, கள்ளம் கபடமற்ற அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வர ஆண்டவரைப் பார்த்து செபிப்போம்.



# கூட்டொருங்கியக்கத்தின் புதுப்பித்தலுக்கு வழிகாட்டும்

## 2ம் வத்திக்கான் சங்கம்

2021ம் ஆண்டு தொடக்கம் 2024ம் ஆண்டுவரை தற்கால திருஅவையை புதுப்பிக்கும் காலத்தின் ஆயத்த காலமாக எமது திருத்தந்தை அவர்கள் கோடிட்டு காட்டுகின்றார். எவ்வாறான புதுப்பித்தல் அவசியமாகின்றது? யார் இந்த புதுப்பித்தலின் பங்குதாரர் என்பதை விரிவாக அனுபவிக்க ஆரம்பித்துள்ளோம். இது எங்கு செல்ல உள்ளது என்பதில் பல திறந்த கருத்துக்கள் வலம் வருகின்றன. இந்த புதுப்பித்தலை சிக்கலாக பார்ப்போரும் உண்டு.

### 2ம் வத்திக்கான் சங்கம் காட்டும் "புதுவழித்திருஅவை"

1960 களின் ஆரம்பத்தில் திரு அவையின் கதவுகளையும், யன்னல்களையும் அகலத்திறக்க 23ம் ஜோன் திருத்தந்தை அறை கூவல் விட காரணங்கள் தான் என்ன? தேங்கி நிற்கும் சமய அறிவில் (Static Religious Doctrine) வளர்ச்சி அடையும் திரு அவைக் கொள்கைகளை நோக்கி பயணிக்க வித்திட்டவை எவை? ஒரு சில கொள்கை சிறைகளில் இருந்து வெளிவர காரணங்கள் எவை? 9ம் பயஸ் (1864) காட்டும் பிழைகளின் பாடத்திட்டங்கள் (Syllabus of Erros) எமக்கு எதனை படிப்பிக்கின்றன? எம்முடைய நம்பிக்கை வாழ்வில், பணி வாழ்வில் நாம் சந்திக்கும் புதிய கேள்விகளும், புரிதல்களும் எவை? அவற்றில் இருந்து நாம் கற்றுக்கொள்ள விரும்புபவை தான் என்ன? அடிப்படையில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஒரு புதுவழித் திருஅவையை சுட்டிக்காட்டியது யாது?

*a).* தேங்கி நிற்கும் சமய அறிவில் இருந்து வளர்ச்சியடையும் கொள்கைகளை காட்டியது.

*b).* நிறுவனத் திரு அவையில் (இராணுவமயமாக்கல்) இருந்து அன்பும், அக்கறையும், இரக்கமும் கொண்ட இறைவனை படம்பிடித்தது.

*c).* இறைவன் தாமாகவே முன்வந்து எம்மை அன்பு செய்பவராக உள்ளார் என்று இடித்துக் கூறி, அந்த இறைவனை பிறருக்கு வெளிப்படுத்த அறைகூவல் விட்டது.

*d).* இறைவனின் படிப்பினைகளில் தேங்கி நிற்காமல் தொடர் தேடல்களை மேற்கொள்ள வழிகாட்டியது.

*e).* பிரமிட் வடிவிலான (நிறுவன) திருஅவையில் இருந்து இறைமக்கள் கூட்டமே திருஅவை என்னும் மாற்று சிந்தனையை தந்தமை.

*f).* நிறுவனக் காப்பாளர்களின் சிந்தனைகளை ஒருபுறம் தள்ளி இறையியலாளர்களின் சிந்தனைகளை அடித்தளமாக மாற்றியமைத்தமை.

இவ்வாறான புதிய மாற்றங்களை கொண்டுவருவதில் சில கருதினால்களும், இறையியலாளர்களும் முக்கிய பங்காற்றினர். அவர்களுள் முக்கியமானவர்கள் சிலரை இங்கே குறிப்பிடலாம். வழமை போன்று நிறுவனக் காப்புத்திட்டம் ஆரம்பத்தில் செல்வாக்கு செலுத்த ஆரம்பித்தது. ஆனால் முடிவு தலைகீழாக மாற்றம் பெற கருதினால் லெனாட்டின் எழுகை முக்கியமானது. உறோமை மன்ற காப்பாளர்களின் முன்மொழியப்பட்ட கொள்கைகள் வகுக்கப்பட்டு, அதற்குரிய 8பேர் ஏற்கனவே நியமிக்கப்பட்டு, இன்னும் 16பேர் தெரிவு செய்யப்பட வேண்டி இருந்தது. ஒவ்வெரு ஏட்டையும் உறுதி செய்வதற்காக அப்பொழுது எழுந்த கருதினால் லேனாட் ***(cardinal Lienart)*** உடனடியாக தெரிவை இரத்து செய்து, சில நாட்கள் ஆயர்களுக்கு அவகாசம் கொடுத்து ஒருவரை ஒருவர் சந்தித்து அறிமுகமாக அவகாசம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ள,அத்தனை ஆயர்களும் பலத்த ஆதரவை தமது கரங்களைத் தட்டி ஆமோதித்த போது "திட்டம்" ஆட்டம் கண்டது. தெரிவுகள் நிறுத்தப்பட்டு சந்திப்புக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இதனை திருத்தந்தையும் முழு மனதுடன் ஆமோதித்து "இதற்காகவே அத்தனை ஆயர்களையும் இங்கே வரவழைத்தேன்" என்றார். இன்னுமொரு மாற்றத்தை முதலாவது அமர்வில் ***(Dei Verbum)*** கருதினால் ஜோசெப் பிறிங்ஸ் ***(Cardinal Josef Frings)*** முன்மொழியப்பட்ட ஆவணத்தில் "போதுமான மேய்ப்புப்பணி சார் கருத்துக்கள் போதிய அளவில் இல்லை" என்று உரைத்துக் கூற, முற்று முழுதாக அவ்வேடு தலைகீழாக மாற்றம் கண்டது. வலேரியன் கிறாசியா எனும் இந்திய கருதினால் ***(Cardinal Valerian Gracia)*** "நாங்கள் சங்கரீதியான சிந்தனைக்குள் சிக்கி இருக்கின்றோம் இதில் இருந்து வெளிவர வேண்டும்" என்றார். சிந்தனைகளையும், எழுத்துக்களையும் தடைசெய்யப்பட்ட இறையியலாளர் டொமினிக்கன் சபையின் ஈவ்ஸ் கோங்கர் ***(Yves Congar)*** இயேசு சபையின் இறையியலாளர் கார்ல்

தொடர்ச்சி 22ம் பக்கம்

அருட்பணி பி. லீயோ ஆம்ஸ்ட்ரோங்



"எலோயி, எலோயி, லெமா சபக்தானி? என்று உரக்கக் கத்தினார்" (மாற் 15:34)

# பொருளுள்ள ஞாயிறு திருப்பலி

**(அருட்பணி. எஸ். ஆரோக்கியராஜ் எழுதிய "திருவழிபாடு ஓர் அறிமுகம்" என்ற நூலிலிருந்து சில பகுதிகள்)**

## திருப்பலியில் தொடக்கச் சடங்குகள்

### 3. வருகைப் பவனி

பொதுவாக, பீடச் சிறுவர்களும், சிறுமியரும் புடைசூழ, திருப்பலி நிறைவேற்றும் குரு பலி பீடத்திற்குப் பவனியாக வருவதையே நாம் வருகைப் பவனி என்று சொல்கிறோம். இவர்களைத் தவிர, அன்றைய திருப்பலியில் முன்னுரை, விளக்கவுரை, வாசகம் வாசிப்போரும்; முதல் நற்கருணை, உறுதிப்பூசுதல், குருத்துவம், துறவற அர்ப்பணம் பெறுவோரும் கூட, இந்த வருகைப் பவனியில் கலந்து கொள்வது மிகவும் வரவேற்கத்தக்கது.



### 3.1 பவனியின் பொருள்

திருப்பலியில் வருகைப் பவனி, காணிக்கைப் பவனி, நற்கருணைப் பவனி என்று மூன்று வகைப் பவனிகளும், சில வேளைகளில் விவிலியப் பவனிகளும் இடம் பெறுகின்றன. இப்பவனிகளின் பொருள் என்ன? பவனிகள் எல்லாமே "நாம் பயணம் செய்யும் திருச்சபை" என்ற கருத்தையே வெளிப்படுத்துகின்றன. அதாவது, நாம் இவ்வுலகில் இருந்தாலும், மறு உலகை நோக்கியே எப்போதும் பயணம் செய்கிறோம் என்பதையும்; இறைவனை நோக்கியே இடைவிடாத ஓர் "ஆன்மிகப் பயணத்தை" நாம் மேற்கொண்டுள்ளோம் என்பதையும் இவை உணர்த்துகின்றன. இதை நாம் நன்கு புரிந்து கொண்டால், இந்தப் பவனிகள் எல்லாம் எப்போதும் நமக்குப் பொருள் மிக்கவையாக இருக்கும்.

### 3.2 வருகைப் பவனியின் வகைகள்

◆ **முதல் வகை** : சாதாரணமாக குரு திருப்பண்ட அறையிலிருந்து ***(Sacristy)*** பீடச் சிறுவரோடு திருப்பலி ஒப்புக்கொடுக்க பலி பீடத்திற்கு வருகிறார். இதுவே வருகைப் பவனியின் முதல் வகையாகும். இயன்றமட்டும் இந்த வருகைப் பவனி தவிர்க்கப்பட வேண்டும்; முக்கியமாக ஞாயிற்றுக் கிழமைகளில் இதைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். ஏனெனில் குரு மக்களில் ஒருவர், மக்களிடம் இருந்தே, மக்கள் சார்பாகப் பலி செலுத்தச் செல்கிறார் என்ற கருத்தை இது வெளிக் கொணர்வதில்லை.

◆ **இரண்டாம் வகை** : மக்கள் எல்லாரும் கோவிலில் கூடியிருக்க,கோவிலின் நுழைவாயிலுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளதிருப்பண்ட அறையிலிருந்தோ, ***(Sacristy)*** அல்லது கோவிலின் நுழைவாயிலில் இருந்தோ குருவும், பீடச் சிறாரும் மக்களைக் கடந்து பலி பீடத்திற்குப் பவனியாக வருவதாகும். இது மிகவும் போற்றுதற்குரியது. ஏனெனில் இது பலி செலுத்தும் குரு "நம்மில் ஒருவர்; அவர் "நம்மிடமிருந்தே பலி செலுத்தச் செல்கிறார்", "நம் சார்பாகப் பலி செலுத்தச் செல்கிறார்" என்பதை விளக்குவதாக அமைந்துள்ளது. இவ்வகைப் பவனியை எல்லாப் பங்கு கோவில்களிலும், சிறப்பாக ஞாயிறுதோறும் நடைமுறைப்படுத்துவது மிகவும் வரவேற்கத்தக்கது.

◆ **மூன்றாம் வகை** : மக்கள் எல்லோரும் கோவிலுக்கு அருகிலுள்ள "கெபி", பள்ளி அல்லது கன்னியர் இல்லம் போன்ற ஏதாவது வசதியான ஓர் இடத்தில் கூடியிருப்பர். பிறகு பீடச் சிறார் மற்றும் குருவுடன் அவர்கள் கோவிலை நோக்கிப் பவனியாகத் திருப்பலிக்கு வருவது. (எ.கா.) குருப்பட்டம் அளிக்கும் திருப்பலியின்போது நடைபெறும் வருகைப் பவனி அல்லது குருத்து ஞாயிறன்று குருத்தோலைகளை ஏந்தி, நாம் மேற்கொள்ளும் "ஆடம்பரப்" பவனி. இதுவே மிகச் சிறந்த பவனியாகும். இதைப் பெருவிழா நாள்களிலாவது நாம் செயல் படுத்துவது மிகவும் நல்லது.



### 4. வரவேற்பு

முக்கியமான விழா நாள்களில் திருப்பலி நிறைவேற்ற வரும் ஆயருக்கோ அல்லது குருவுக்கோ பாடல் பாடி, மங்கள ஆரத்தி எடுத்து, பலி செலுத்த அழைக்கலாம். அது முடிந்தவுடன் குருவும் பாடல் பாடி. மக்களுக்கு ஆரத்தி எடுத்து, அவர்களைப் பலியில் பங்கெடுக்க அழைக்கலாம். (இது ஏற்கெனவே நடைமுறையில் உள்ள குருவுக்கும், மக்களுக்கும் தூபமிடும் சடங்கை ஒத்தது என்பதை மறந்துவிடக் கூடாது. மேலும் இது குருவிலும், மக்களிலும் உடனிருக்கும் கிறிஸ்துவை அடையாளம் கண்டுகொள்ள உதவும் ஒரு கருவி என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது). இதை நம் பண்பாட்டிற்கேற்ப, மேற்சொன்னவாறு செய்வது நல்லது. இருப்பினும், இது கட்டாயப்படுத்தப்படக் கூடாது. இது பற்றி

தொடர்ச்சி 22ம் பக்கம்

"மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்." (தொ.நூ 1:26)

# ஐரோப்பாவின் கத்தோலிக்கப் பாரம்பரியங்கள் –I
# திரு இரத்தத் திருப்பண்டம் – தொடர் –

இத்தாலியின் மேற்குப் பிராந்தியத்தில் நீர்ப்பரப்பினால் சூழப்பட்ட 2000 வருடங்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஓர் நகரமே மாந்தோவா (Mantova) ஆகும். இதன் இயற்கை நீர்வளம் காரணமாக இதனை தெற்கு இத்தாலியின் சின்ன வெனிஸ் (Piccola Venezia) என செல்லமாக அழைப்பார்கள். யுனஸ்கோவினால் (Unesco) 2008 ஜூலை உலக மரபுரிமைகளில் ஒன்றாக இந்நகரம் பிரகடனப்படுத்தப்பட்டது. கிரேக்கப் புராணங்களில் இடம்பெற்றுள்ள Manto என்னும் குறிசொல்பவரின் பெயர்தழுவி இந்நகரம் பெயரிடப்பட்டுள்ளது. இயற்கை வனப்பும், வரலாற்றுச் சிறப்பும் மட்டுமல்ல மாறாக எம் கத்தோலிக்க கலை கலாசாரத்திலும் இந் நகரத்திற்கு சிறப்புரிமையுண்டு.

1328 ம் ஆண்டு Gonsagas குடும்பத்தினர் நகரப் பிரபுக்களாக பொறுப்பேற்று நவீன நகர வாழ்க்கை மற்றும் கலைப்படைப்புகளுக்கு வழி சமைத்தனர். இங்கு அமைந்துள்ள புனித அந்திரேயா பெசிலிக்காவானது இந்நகர் யாத்திரைத் தலமாக பிரசித்தியடைய பிரதான காரணியாக அமைந்தது. லியோன் பதிஸ்தா அல்பேர்த்தி(Leon Battista Alberti ) என்னும் கட்டிடக்கலை வல்லுனரின் வடிவமைப்பைத் தழுவி 1472ம் ஆண்டு அடிக்கல் நாட்டலோடு ஆலய நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகி Filippo Juvarra வினால் ஆலய மேற்கூரையுடன் (Dome ) பூர்த்தியடைந்தது. ஆலய பிரதான பலிபீடத்திற்கு முன்பாக













எண்கோண வடிவிலான அமைப்புக் காணப்படுகின்றது. இதனைச் சுற்றி பக்தர்கள் முழந்தாழ்படியிட்டு செபிப்பதை அவதானிக்க முடியும். இவ்வெண்கோணி அமைப்புக்குள் உட்பிரவேசிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனெனில் இதற்கு கீழாகவுள்ள நிலவறைச் சிற்றாலயத்தில் (Crypt) எம் ஆண்டவர் இயேசுவின் திருஇரத்தம் தோய்ந்த மண் திருப்பண்டமாக வைக்கப்பட்டுள்ளது. கல்வாரி முகட்டிலே இயேசுவின் கடைசி மணித்துளிகளின் போது உரோமைப் போர் வீரர் இயேசுவின் இறப்பினை உறுதி செய்ய தனது ஈட்டியினால் விலாவினைக் குத்தித்திறந்ததாக விவிலியம் விபரிக்கிறது (யோவான் 19:33-34). கத்தோலிக்கப் பாரம்பரியத்திற்கேற்ப இந்நூற்றுவத்தலைவரின் குருடாகிப்போயிருந்த கண்ணில் இயேசுவின் இரத்தத்துளிகள் படிந்து பார்வை பெற்றதாக கூறப்படுகின்றது. இப்போர்வீரர் தாம் சுகம் பெற்றதை உணர்ந்து இயேசுவின் சிலுவையடியில் சேகரித்த குருதிதோய்ந்த மண்ணை திருப்பண்டமாக போற்றி வந்தார். இதனைக் காப்பாற்றவே கி.பி.37ம் ஆண்டு ஓர் மறைசாட்சியாக தன்னுயிரை பலியாக்கி புனித லோன்ஜினுஸ்(St.Longinus) எனத் திருச்சபை வரலாற்றில் கொண்டாடப்படுகின்றார். இயேசுவின் திரு இரத்தம் தாங்கிய இத்திருப்பண்டம் வருடாவருடம் ஒவ்வொரு பெரிய வெள்ளியன்றும் நகர வீதிகளில் பவனியாகக் கொண்டுசெல்லப்படுகின்றது. கொரோனா கொள்ளைநோய் தாக்கிய தருணத்தில் ஒரு சிறப்புப் பவனி இடம்பெற்றதாக அறிகின்றோம். எமக்காக சிந்திய இயேசுவின் இரத்தம் இன்னும் இவ்வுலகில் இருப்பது ஓர் மெய்சிலிர்க்கும் அனுபவமாகும்.

**Fr.கிளேரியன்**

ஆண்டவரே, உம்மைப் புகழ்வேன்; ஏனெனில் என்னைக் கைதூக்கிவிட்டீர் (திபா 30:1)

# சேனையின் விழாக்கள்

மரியாயின் சேனையின் விழாக்களில் பிரதானமான விழாவாக விளங்குவது சேனையின் ஆட்சர்ஸ் விழாவாகும். இது பிரதானமாக கொண்டாடப்படுகின்ற நாள் வானதுதர் கபிரியேல் மரியன்னைக்கு மங்கள் வார்த்தை சொன்ன மார்ச் மாதம் 25 ஆம் நாளை ஒட்டிய ஒரு நாளாகும். அதே நாளில் கொண்டாடப்பட்டால் விஷேசமாக இருக்கும். அல்லது அந்த நாளை ஒட்டிய ஒரு வசதியான ஒரு நாளை சேனையாளர் தெரிந்து கொள்ளளாம்.

முதன்முதலாக ஆட்சர்ஸ் விழா சேனை தொடங்கி ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் இவ் விழா கொண்டாடப்பட்டது.



(அதாவது 1931ம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் நாள்) ஆட்சர்ஸ் என்பது இலத்தீன் சொல்லுக்கு போர் முனையில் அணிவகுத்து நிற்கும் படை என்பது பொருள்.

இப்பெயர் விழாவுக்கு பொருத்தமாக அமைந்திருக்கின்றது. ஏனெனில் இவ் விழாவின் பொழுது சேனையாளர் அனைவரும் ஒன்றுகூடி தங்களின் சேனையின் அரசியாகிய கன்னிமரியாவுக்கு தங்கள் பிரமாணிக்கத்தைப் புதுப்பித்து தீயசக்திகளை எதிர்த்து இன்னோர் ஆண்டு போர்புரியத் தேவையான வல்லமையையும் ஆசீரையும் அவளிடமிருந்து பெறுகிறார்கள். ஆகவே ஒவ்வொரு சேனையாளரும் இவ் விழாவில் கலந்துகொள்ளத் தவறுவாராயின் அவரிடம் சேனையின் மனப்பான்மை சிறிதளவும் இல்லையென்றோ இருந்தாலும் மங்கிவிட்டது என்றோ நன்றாக அறிந்து கொள்ளலாம்.

ஆட்சர்ஸ் விழாவின் போது சேனையாளர் அனைவரும் இருவர் இருவராக சென்று வெட்சிலியத்தின் தண்டில் கையை வைத்து

**"என் அரசியே என் தாயே நான் முழுவதும் உமக்கே சொந்தம் என்னிடம் உள்ளதெல்லாம் உமக்கே சொந்தம்"**

என்ற வார்த்தைகளைச் சொல்லி தங்களைத் தனித் தனியாக மரியன்னைக்கு ஒப்புக்கொடுப்பார்கள்.

**அற்புத மாதா கியூரியா அங்கத்தவர்கள், நீர்கொழும்பு**







# தாய் சஞ்சிகை

## வளர்ச்சியின் படிகள் 1997 - 2024

புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலயம் 2000மாம் ஆண்டு யூபிலிக்காக 3 ஆண்டு ஆயத்தத்துக்காக திட்டங்கள் போட்டுக்கொண்டு இருந்த காலம். பங்குத்தந்தை ஆனந்தன் பெர்னாண்டோ புள்ளே அவர்கள் பங்கின் வளர்ச்சிக்காக கல்வி, கலாச்சாரம், ஆன்மீகம் மற்றும் இளைஞர் சமூகம் இப்படியாக பல துறைகளிலும் குழுக்களை உருவாக்கினார். கலாச்சார குழுவின் ஒரு பணியாக 4 மாதங்களுக்கு ஒரு முறை சஞ்சிகை வெளியிட தீர்மானித்தார். அதற்கு ஆசிரியராக திருவாளர் அம்புரோஸ் பீட்டர் அவர்களை நியமித்து **"வியாகுலத்தாய்"** என்று பெயர் சூட்டி ஒரு சிறிய அளவிலான சஞ்சிகையாக அது வெளியிடப்பட்டது.



1999ம் ஆண்டு வரும் போது இது ஒரு பெரிய சஞ்சிகையாக பல வர்ணப் பக்கங்களை உள்ளடக்கியதாகவும், மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும் புத்தகமாகவும் மாறி இருந்தது. அக்காலத்தில் கொழும்பு மறைமாவட்டத்தில் பணியாற்றிய தமிழ் பேசும் குருக்கள், மறைமாவட்ட தமிழ் மக்களுக்கு தமிழில் ஒரு சஞ்சிகை அவசியமாக தேவைப்படுகிறது என்ற குறையை முன்வைத்தனர். அக் கூட்டத்தில் அருட்தந்தை ஆனந்தன் அவர்கள் இந்த சஞ்சிகையை கொழும்பு புனித யோசப் வாஸ் மன்றம் பொறுப்பெடுத்து ஒரு மறைமாவட்ட சஞ்சிகையாக வெளியிட தனக்கு ஆட்சேபனை இல்லை எனக்கூறி, அச் சஞ்சிகைக்கு



**"தாய்"** என்று பெயர் மாற்றி, அருட்தந்தை ஆனந்தன் அவர்களே பிரதம ஆசிரியர் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். இந்த தாய் சஞ்சிகையின் ஒரு இதழ் அன்றைய நாள் பேராயர் நிக்லஸ் மார்கஸ் ஆண்டகை அவர்களின் மனதைக் கவர்ந்தது. உடனே தொலைபேசி மூலம் அருட்தந்தை ஆனந்தன் உடன் தொடர்பு கொண்டு, வாழ்த்தி, தேவைகளைக் கேட்டறிந்தார். அப்போது தாயின் தேவை அந்த சஞ்சிகையை மாதாந்த சஞ்சிகையாக ஆக்கியது. பேராயரும் அதனை ஏற்றுக் கொண்டு வெளிநாட்டில் இருந்து பண உதவி பெற்றுக் கொடுத்தார்.

தாய் சஞ்சிகை 2002ம் ஆண்டு வரும் போது மாதாந்த சஞ்சிகையாக மாறியது. 26 ஆண்டுகளாக இச் சஞ்சிகை தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களின் தாகம் தீர்க்கும் ஒரு சஞ்சிகையாக வலம் வந்து கொண்டு இருக்கின்றது.கொழும்பு மட்டும் அல்லாது ஏனைய மறை மாவட்டங்களையும், ஏன் பிற நாடுகளில் வாழும் தமிழ் மக்களையும் அடைந்து வருகிறது.

2012ம் ஆண்டு வரும் போது சஞ்சிகை வெளியிடுவதில் பல தரப்பட்ட இன்னல்களுக்கு முகம் கொடுக்க மாதாந்த



சஞ்சிகை என்ற நிலை மாறி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை, மூன்று மாதத்திற்கு ஒரு முறை என்று வெளியிடப்பட்டது. 2022ம் ஆண்டு பொருட்களின் விலை, பத்திரிகையின் விலை எம் நாட்டில் அதிகரித்த காரணத்தால் ஓர் ஆண்டு சஞ்சிகை வெளியிட முடியாமல் போனது. ஆனால் இரண்டு சஞ்சிகைகள் இணையத்தளத்திலும், சமூக வலைத்தளத்திலுமாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. 2023ம் ஆண்டு நடுப்பகுதியில் இருந்து மீண்டும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இச் சஞ்சிகை வெளிவருகிறது. ஒவ்வொரு சஞ்சிகைக்கும் பெரிய தொகை கையால் செலவழிக்க நேரிட்டாலும் கொழும்பு புனித யோசப் வாஸ் மன்றம் இச் சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றது. கூடிய சீக்கிரம் இச் சஞ்சிகையானது மாதாந்த சஞ்சிகையாக மாற வேண்டும் என்பது எமது ஜெபம்.

*"மன்றத்தின் மேலும் ஒரு பணி பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்"*

**"மறை வளர ஒன்றிணைவோம்"**

- எஸ்டன் -


கொழும்பு பெரிய சிலுவைப்பாதை
18.02.2024
STUDIO VINO CLICKS
+94 773 725 735



தவக்கால திருயாத்திரை — 2024 மக்கோண கல்வாரி
புனித அன்னம்மாள் — அன்னை வேளாங்கன்னி பங்கு — செக்கட்டித்தெரு



பொரள்ள சகல புனிதர்கள் ஆலய பங்கு தமிழ் மக்கள் ஹினிதும கல்வாரிக்கான திருயாத்திரையை மேற்கொண்டிருந்தனர்.



புதுச்செட்டித் தெரு, புனித வியாகுல மாதா பங்கு தவக்கால தியானம். (26.02.2024-08.03.2024)



முகத்துவாரம், புனித யாகப்பர் ஆலய பங்கு மக்கள் மடுத் திருத்தலத்திற்கு திருயாத்திரை மேற்கொண்டனர்



புதுச்செட்டித்தெரு, புனித வியாகுலமாதா பங்கு, புனித இயூஜின் டிமெசனட் கழகத்தினர் மேற்கொண்ட குடாகம திருத்தலத்திற்கான தவக்கால திருயாத்திரை.

முகத்துவாரம், புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்கின் தமிழ் மக்கள் 5 வது முறையாக இம்மாதம் 9 ந் திகதி மாவத்தகம புனித வியாகுல மாதா ஆலயத்திற்கு சென்று இயேசுவின் பாடுகளைத் தியானித்தனர்.



பனிமயமாதா சங்கத்தினரால் தவக்காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ராகம தேவத்தை கல்வாரி திருயாத்திரையை படத்தில் காணலாம்.



தவக்கால கண்காட்சி
புனித அன்னம்மாள், அன்னை வேளாங்கண்ணி ஆலய பங்கு
24.03.2024



கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் இளைஞர் முன்னணியினரால் ஹினிதும கல்வாரிக்கான திருயாத்திரை





புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய..........
செய்தி பக்கம் 22ஐ பார்க்கவும்










தவக்காலத்தை முன்னிட்டு கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட அன்னையர் தியான நிகழ்வுகள் (காண்க: பக்-18)



கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தால்23.02.2024 நோன்மதி தினத்தன்று வரக்காபொல மாஹென கல்வாரி திருத்தலத்திற்கு சென்று சிலுவைப்பாதை செய்யப்பட்டது.






## கிராண்பாஸ் புனித சூசையப்பர் பங்கின்...

பக்கம் 22 ஐ பார்க்கவும்








கொழும்பு உயர் மறைமாவட்ட **சிறுவர் தினம்**,
தேவத்தை தேசிய பசிலிக்காவில் 24.02.2024 அன்று
**“செபிக்கும் பிள்ளைகள் நாமாவோம்”** என்ற தலைப்பில் இடம் பெற்றது.
இந்நிகழ்வில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள்
கலந்து கொண்டு திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.
சிறுவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.






ஆண்டவரே, உம்மைப் புகழ்வேன்; ஏனெனில் என்னைக் கைதூக்கிவிட்டீர் (திபா 30:1)





# கல்வாரிக்கு புதிய அர்த்தம் சொன்ன இயேசு

- செல்வி த. மேரி பற்றீசியா -

## கல்வாரி பாதை அன்று

கரடுமுரடான பாதை
முட்கள் நிறைந்த பாதை
கசையடி தரும் பாதை
கயவர் கூட்டம் நிறைந்த பாதை
வசை மொழி கூறும் பாதை
மனித இதயமற்றவர் குவிந்த பாதை
யாரும் செல்ல விரும்பாத பாதை
சிலுவை சுமக்கச் செய்யும் பாதை
கொடூரத்திற்கு குறைவில்லாத
வேதனை நிறைந்த பாதை
விழ வைத்த
அழ வைத்த பாதை

## இயேசு அப்பாதையில் நடந்ததால்–இன்று

வாழ்வின் பாதை
எளிய பாதை
இனிய பாதை
மீட்பின் பாதை
அருளின் பாதை
எழுச்சியின் பாதை
கடவுளின் கரம் பற்றும் பாதை
ஒளியின் வழியின் பாதை
விண்ணகம் செல்ல உதவும் பாதை

## கல்வாரி மலை அன்று

யாரும் விரும்பாத மலை
ஆடை இழக்க நேரிடும் மலை
தனிமையின் கொடுமை தரும் மலை
அவமானம் தரும் மலை
சிகரமோ மீளமுடியாத துன்பம்

## ஆனால் இயேசு அங்கு அறையப்பட்டதால்

துன்பக்கிண்ணம் இனிக்கும் மலை
அருளின் ஆடை வழங்கும் மலை
இறை பிரசன்னம் நிறைந்த மலை
இறைகரம் தாங்கும் மலை
சிகரமோ மீட்பளிக்கும் அன்பு

## அன்று கல்வாரி மனிதரின் அன்பு

கைவிட்ட பொய்மை அன்பு
காட்டிக்கொடுத்த துரோக அன்பு
மறுதலித்த பயத்தின் அன்பு
ஓடி ஒளிந்த சுயநல அன்பு
மனித மாண்பை புதைத்த அன்பு

## ஆனால் கல்வாரியில் தியாகப் பலியான கடவுளின் அன்பு இன்று

கைவிடாத பேரன்பு
காட்டிக்கொடுக்காத பாச அன்பு
மறுதலிக்காத தூய அன்பு
ஓடிஒளியாத பரிவன்பு
உயிரையே கொடுக்கும் உன்னத அன்பு
நீ தான் என் உயிர் என
ஆரத்தழுவும் அன்பு

## அன்றைய கல்வாரி பாடம்

கள்வருக்கான தண்டனை
கயவருக்கான நிந்தனை
பொய்யான தீர்ப்புக்கான
அரங்கேற்றம்
கொடூர சித்திரவதை தரும்
கூட்டம்
பதவி மோகம் மனித மாண்பை விற்ற
விநோதம்
சுயநலம் மனிதத்தை புதைத்த அநீதம்



# உனக்காக நான் மரித்தேனே!

## எனக்காக நீ என்ன செய்தாய்?

-ஜெயக்குமார் பெர்னாண்டோ-

திருநீற்று புதனோடு தவக்காலம் ஆரம்பமாகிறது. பெரிய வெள்ளிக் கிழமை வரை 45 நாட்கள். இயேசுவின் திருப்பாடுகளை நினைவுக்கு கொண்டுவரும் காலம் சிலர் திருயாத்திரைகள், தியானங்கள், திருவிழிப்புகள் என்று எத்தனையோ பக்தி முயற்சிகளை மேற்கொள்கின்றனர். வேறு சிலர் உபவாசம், ஒறுத்தல் போன்ற தியாகக் கிரிகைகளில் ஈடுபடுகின்றனர். இந்த காலப்பகுதியில் மதுபானம் அருந்தும் பழக்கம் உள்ளவர்கள், புகைப் பிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் அதை தவிர்த்துக் கொள்கின்றனர். கேளிக்கை களியாட்டங்கள், வேடிக்கை விநோதங்களை பிற்போடுகின்றனர். இயேசு 40 நாட்கள் வனாந்தரத்தில் உபவாசம் இருந்ததை நினைவு கூர்ந்து இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எமக்காக தன்னுயிர் ஈந்த எம்பெருமான் இயேசு இவற்றையா எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றார்? இல்லவே இல்லை. பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் இம்முறை தமது தவக்கால சிந்தனையில் “உண்ணா நோன்பு இருப்பதோ, வேறு தியாக நடவடிக்கைகளில் ஈடு படுவதோ, வீணாக எம்மை வருத்திக் கொள்வதோ தவக்கால கிரித்தியம் அல்ல” என்ற தொனியில் கூறியிருக்கின்றார்.

எம்மை நாமே மாற்றிக் கொள்ள வேண்டும், கெட்ட பழக்க வழக்கங்களை முற்றாக கைவிடவேண்டும்.தவக்காலத்தில் மட்டுமல்ல, இனிவரும் காலங்களிலும் முற்றாக அழித்தொழிக்க வேண்டும். இந்தத் தவக்காலம் எம்மில் ஒரு புது மாற்றத்தைக் கொண்டு வராவிட்டால் எந்த முயற்சியிலும் பலன் இல்லை. பசித்தவர்களுக்கு உணவளிக்க வேண்டும், ஆடையின்றி இருப்பவர்களுக்கு ஆடையளிக்க வேண்டும், ஆதரவின்றி இருப்பவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். சிலுவையில் மூன்று ஆணிகளில் தொங்கிக் கொண்டிருக்கும் பரமன் இயேசுவின் வதனத்தை உற்று நோக்குங்கள், கன்னங்களில் வழிந்தோடும் திரு இரத்தம் ஆயிரம் கதைகள் சொல்லும். ஜெத்ஸமனித் தோட்டத்தில், தான் படப்போகும் பாடுகளை நினைத்து, வேதனைப்பட்டிருப்பாரென்றால் அவருடைய வியர்வையே இரத்தமாக வெளிவந்திருக்கக்கூடும். தனது மரணத்தை நினைத்து அவ்வளவு தூரம் பயந்திருக்கிறார்.

அவர் பட்ட அத்தனை பாடுகளும் நமக்காகத் தான். எங்கள் பாவங்களுக்காக அவர் இரத்தம் சிந்தினார், தன்னுயிர் ஈந்தார். அவருக்காக நாம் என்ன செய்தோம்? என்ன செய்யப் போகின்றோம்? அவர் கற்பித்ததெல்லாம் “பிறரன்பு”.

**“பிறரன்பு”**

நீ உன்னை நேசிப்பது போல் உன் அயலானையும் நேசி, அவர் கேட்டுக் கொண்ட தெல்லாம் பிறர் குற்றங்களை மன்னிக்கும்படி. தெரிந்தோ, தெரியாமலோ, அறிந்தோ, அறியாமலோ செய்த பாவங்களுக்காக மனதார மன்னிப்பு கேட்டு மீண்டும் அவ்வாறான பாவங்களை செய்யாமல் எம்மை திடப்படுத்திக் கொள்ளவேண்டும். எம்மைப் பின்பற்றி மற்றவர்கள் நல்வழி நடக்க நாம் ஒரு முன்மதிரியாகத் திகழ வேண்டும். இதையே கிறிஸ்து விரும்புகிறார். இத் தவக்காலத்தில் சிந்திப்போம். செயல் படுவோம், வாழ்வை மாற்றத் திடம் கொள்வோம்.

# அன்னையர் தியானம் - 23.03.2024 -

தவக்காலத்தை முன்னிட்டு கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தினர் அன்னையர் மற்றும் திருமணமான பெண்களையும் ஒன்றிணைக்கும் முகமாக ஏற்பாடு செய்யும் அன்னையர் தியானமானது வழமைபோல் மருதானை புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.00 மணியளவில் நிறைவுபெற்றது.

இத்தியானத்தை தளவாக்கலை பங்குத்தந்தை அருட்பணி கபிரியேல் குணசேகரன் அடிகளார் வழிநடத்தினார். அருட்தந்தை அந்திரியாஸ் அடிகளார் அழைத்தலைப்பற்றியும் அழைத்தலின் முக்கியத்துவம் பற்றியும் விளக்கமளித்ததோடு மன்றத்தின் ஆன்மீக இயக்குனர் தந்தையுடன் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தார். திருப்பலி நிறைவில் கலந்து கொண்டோருக்கு செபமாலை ஆசீர்வதித்து வழங்கப்பட்டதோடு அனைவரும் தனித்தனியாக அருட்பணியாளரால் ஆசீர்வதிக்கவும் பட்டனர்.

இத்தியானத்தை மன்றத்தின் பயிற்சிப்பணிக்குழுவின் இளம் பெண்கள் குழுவினர் முன்னின்று ஏற்பாடு செய்தனர். கலந்து கொண்டோருக்கு பகலுணவும் தேனீரும் வழங்கப்பட்டது.



“உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன்” (எரேமியா 1 : 17-19)

# ஆதித்திருச்சபையில் கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவம் – தொடர் கட்டுரை –

## உரோமையர் 6 : 1 – 23

பாவம் என்றால் என்ன என்பது எமக்குத் தெரியும். அது நம்மை இறைவனிடமிருந்து பிரிக்கின்றது. நரக பாதாளத்திற்கு நம்மை வீழ்த்துகின்றது. சதாகாலமும் அழுகையும், பற்கடிப்பும் நிறைந்ததுதான் நரகவாழ்வு.

இந்த அழிவின் வாழ்வுக்கு நாம் உட்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும், பாவ வாழ்விலிருந்து ஆன்மாவை காத்துக்கொள்ளவுமே இயேசுநமக்காக மரித்தார். ஆயினும் அந்த மரணம் இன்றுவரை மட்டுமன்றி இந்த உலகம் இருக்கும்வரை நினைத்து தியானித்து நாம் வேதனைப்படுமளவிற்கு கொடூரமானது. இந்த பாடுகள் நிறைந்த மரணத்தை இயேசு மேற்கொள்ளவே இந்த உலகத்தில் பிறந்தார்.

அந்த அளவிற்கு எம் ஒவ்வொருவர் மீதும் அளவற்ற அன்புகொண்ட இறைவன் நாம் பாவத்திலிருந்து விடுதலைபெற வேண்டி பாவத்தின் படைப்பாளியான பிசாசின் தலையை மிதித்தார். அத்தோடு எம்அனைவரின் பாவங்களும் இயேசுவுடன் கூட அடக்கம் பண்ணப்பட்டது. நாம் விடுதலை அடைந்தோம்.அவரது உயிர்த்தெழுதலின் வழியாக மீண்டும் புதியதொரு மீட்பின் வாழ்வை நாம் சுதந்தரித்து கொண்டோம்.

ஆயினும் நாம் எமக்குரிய பரலோகவாழ்வை சுதந்தரித்து கொள்ள வேண்டுமாயின் அந்த பாவத்தின் நிழலைக்கூட நாம் நாடக்கூடாது. கிறிஸ்து ஒருமுறை நமக்காக மரித்தார்.




ஆனால் நாம் அனுதினம் பாவத்தில் வீழ்கிறோம். அதனால் நாம் எமது திருமுழுக்கினால் இயேசுவோடு இணைந்தது போல அவரோடே கூட மறுவாழ்வை சுதந்தரிக்க வேண்டுமாயின் அவரைப்போன்றே நாம் கடவுளுக்காக கடவுளுடன் வாழவேண்டும்.

அப்போது நாம் தூய வாழ்வினை சுதந்தரித்துக்கொள்ள வேண்டும். இதனால் நமக்குக் கிடைப்பது நிலைவாழ்வு.

**தொடரும்.**

**– திருமதி. கோமஸ் –**



**தாய் வாசகர்கள் அனைவருக்கும் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறோம்.**

*Happy Easter* **அல்லேலூயா!**

# விவிலிய வினா விடைகள்
## அங்கம் 1
## (தவக்காலத்தை ஒட்டிய வினா விடைகள்)
*- Brother Kanthan -*

1. திருவழிபாட்டு ஆண்டு என்றால் என்ன?
2. திருவழிபாட்டுக் காலம் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது?
3. இக்காலங்களின் இயல்புக்கு ஏற்ற வகையில் எவ்வாறு பிரிக்கலாம்?
4. தவக்காலம் என்றால் என்ன?
5. தவக்காலம் தோன்றிய வரலாறு
6. இன்று தவக் காலம் கடைப்பிடிக்கப்படும் முறை யாது?
7. தவக்காலத்தின் நோக்கம் யாது?
8. தவக்காலம் எத்தனை நாட்கள் கொண்டது?
9. தவக்காலத்தில் நாற்பது நாட்கள் கடைப்பிடிப்பதற்கான பின்னணி யாது?
10. சாம்பல் புதனின் சிறப்பு யாது?
11. சாம்பல் எங்கிருந்து கிடைக்கிறது?
12. சாம்பல் புதன் ஒவ்வொரு ஆண்டும் ஒரே தினத்திலேயா வரும்?

**✦குறிப்பு :- இப்போட்டிக்கான சரியான பதில்களை WhatsApp ஊடாக அனுப்பவும். அதிர்ஷ்டசாலிகளுக்கு எம் மன்றத்தின் சார்பாக சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும்.**

**✦Whatsapp number**

**0775595399**

**0767725745**

**0773291072**



மக்கள் வெள்ளம் நிரம்பி காணப்பட்ட



# கொழும்பு பெரிய சிலுவைப்பாதை
## 18.02.2024

கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தினால் வருடந்தோரும் தவக்காலத்தில் ஏற்பாடு செய்யப்படம் கொழும்பு பெரிய சிலுவைப்பாதையானது இவ்வருடம் 18.02.2024 அன்று நடைபெற்றது.

இவ்வருடம் சிலுவைப்பாதையில் பெருந்திரளான மக்கள் நாடெங்கிலுமிருந்து வந்து கலந்து கொண்டனர். சிலுவைப்பாதை செல்லும் பாதையெல்லாம் மக்கள் வெல்லம் போல திரண்டு சென்றனர். அருட்தந்தை ரொக்சன் குரூஸ், அருட்தந்தை ரெக்ஸ், மற்றும் அருட்தந்தை ஏஷ்லி ஆகியோரின் மறையுரையானது அனைவரையும் தன் பால் ஈர்த்தது. நீண்ட கால இடைவெளியின் பின் மக்கள் பெருந்திரளாக பங்குகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் ஊடகத்துறையினர் இம்முயற்சிக்கு பெரும் உற்சாகத்தை அளித்தனர்.

சிலுவைப்பாதையின் இறுதியில் கொட்டாஞ்சேனை, புனித லூசியாள் பேராலயத்தின் முன்பாக கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு என்டன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இச்சிலுவைப்பாதையை அருட்பணி ஒனாசியஸ் அடிகளார் தலைமை தாங்கி நடாத்தினதோடு கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தினரும் இதனை மிகச்சிறப்பாக நடாத்தி முடித்தனர்.



"உன் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வா;" ( ஓசேயா 14 : 1-9)



# யூபிலி ஆண்டிற்கான இலச்சினை வெளியீடு

- திருத்தந்தை பிரான்சிஸ் -

கத்தோலிக்க திருஅவையில் யூபிலி ஆண்டு கொண்டாட்டம் ஆரம்பத்தில் ஒவ்வொரு 100 வருடங்களுக்கும் பின்னர் கொண்டாடப்பட்டது. பின்னர் திருவிவிலிய முன்மாதிரியைப் பின்பற்றி, ஒவ்வொரு 50 வருடங்களுக்கும், இறுதியாக ஒவ்வொரு 25 வருடங்களுக்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. 2000மாவது ஆண்டில் "கிறிஸ்து நேற்று, இன்று, என்றென்றும்" என்ற பொன்மொழியுடன் யூபிலி ஆண்டு கொண்டாடப்பட்டது.

கையால் வரையப்பட்டு பல வடிவமைப்புகள் பெறப்பட்டன என்றும், கற்பனை மற்றும் எளிய நம்பிக்கையின் பலனாக இவற்றைப் பார்ப்பது மனதிற்கு நிறைமகிழ்ச்சி அளிக்கிறது என்றும், திருபீட அதிகாரி ஒருவர்குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் 28 ஆம் தேதி, செவ்வாயன்று, வத்திக்கானின் அப்போஸ்தலிக்க அரண்மனையின் சாலா ரெஜியாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், எதிர்வரும் 2025 ஆம் யூபிலி ஆண்டிற்கான அதிகாரப்பூர்வ இலச்சினையை வெளியிட்டபோது, புதியவழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவையின் தலைவர் பேராயர் ரினோ இவ்வாறு கூறியுள்ளார்.

ஜூன் 11 ஆம் தேதி, பேராயர் ரினோ மூன்று இறுதி திட்டங்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களிடம் ஒப்படைத்ததாகவும், பலமுறை ஆராய்ந்து பார்த்ததில் திருத்தந்தை, ஜியாகோமோ டிராவிசானி என்பவர் வரைந்த இலச்சினை படத்தை தேர்வு செய்துள்ளதாகவும் பேராயர் ரினோ தெரிவித்துள்ளார்.

இந்த இலட்சினையானது, புவியின் நான்கு மூலைகளிலிருந்தும் அனைத்து மனித இனத்தையும் அடையாளப்படுத்தும் விதமாக நான்கு அழகான மனித உருவங்களைக் காட்டுகிறது. மேலும் அவர்கள் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் அரவணைத்து செல்வது, உலக மக்களை ஒன்றிணைக்க வேண்டிய ஒற்றுமையையும் உடன்பிறந்த உணர்வு நிலையையும் எடுத்துக்காட்டுகிறது. இதிலுள்ள முதல் மனித உருவம் சிலுவையை தழுவி நிற்கிறது. இந்த நான்கு மனித உருவங்களுக்கும் கீழுள்ள கடல் அலைகள், மனித வாழ்வின் பயணம் என்பது போராட்டம் நிறைந்தது என்பதையும், அதில் நாம் நம்பிக்கையுடன் பயணிக்கவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

இந்த இலட்சினையில் சிலுவையின் கீழுள்ள நங்கூரமானது பேரலைகளில் அல்லாடும் கப்பலை நிலைநிறுத்த உதவுவதுபோல, பல்வேறு போராடங்காளால் தள்ளாடும் மனித வாழ்வை நிலைநிறுத்த இந்தச் சிலுவை என்னும் நங்கூரம் உதவுகிறது என்பதைக் குறித்துக் காட்டுகிறது.




புதியவழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவையிடம் 2025 ஆம் யூபிலி ஆண்டிற்கான திருப்பீடத் தயாரிப்புகளை "நம்பிக்கையின் திருப்பயணிகள்" என்ற பொன்மொழியுடன் ஒருங்கிணைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நிலையில் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

நன்றி : namvazhvu.in/Vatican-News

# பைபிள் ஹீரோக்கள்

தொடர்ச்சி..... 16

# - பிலயாம் -




## சிறுவர் பக்கம்

**ஆக்கம் : இவஞ்ஜலிஸ்டா வினோலிசன்**


அன்பு பிள்ளைகளே,
விவிலியத்திலுள்ள **பேசும் கழுதை** பற்றியும், தீமைகள் நிறைந்த உலகத்தில் நாம் நல்லதையே தெரிவு செய்ய வேண்டும் எனும் பாடத்தை கற்றுத் தருகிறார். இந்த இதழ் ஹீரோ **பிலயாம்**

எகிப்திலிருந்து வந்து, மோவாபில் தங்கிய பெருந்திரளான இஸ்ராயேல் மக்களை கண்டு அச்சமுற்ற மோவாபிய அரசன் பாலாக், கத்தியின்றி சண்டையின்றி அவர்களை அழிக்க எண்ணினான். அந்நாட்களில் புகழின் உச்சியிலிருந்த இறைவாக்கினரான பிலயாம், வாழ்த்தியோர் வளமோடு வாழ, அவரால் சபிக்கப்பட்டோர் பூண்டோடு அழிந்தனர்.

எனவே மோவாபிய மன்னன் பிலயாம் மூலம் இஸ்ராயேலை சபிக்க திட்டம் போட்டு, அவரை அழைத்து வர ஆட்களை அனுப்பினான். ஆனால் கடவுள் பிலயாமை தடுக்கவே, அவர் அவர்களோடு செல்லவில்லை.



கடவுளின் தூதர், வழி மறித்ததால் கழுதை வழியை விட்டு விலகி, வயலில் இறங்க, பிலயாம் அதை அடித்தார்.





இரண்டாம் முறை வெள்ளி, பொன்னோடு அவர்களை விட மதிப்பிற்குரியோரை அனுப்பினார்.




*மிகுதியான செல்வத்திற்கு ஆசைப்பட்டு, இஸ்ராயேலரை சபிப்பதற்காக பிலயாம் அவர்களோடு புறப்பட்டுப்போனார் .*



2வது முறை இருபுறமும் சுவர் கட்டப்பட்டிருந்த பாதையில் வழி மறிக்க, கழுதை சுவரோடு சாய்ந்து உரச, அடித்தார் .



3வது முறை குறுகலான பாதையில் வழி மறிக்க, அது வழியிலே படுத்துக்கொள்ள, 3ம் முறையாகவும் அடித்தார் .



பிலயாம் போகும் வழியில் கடவுளின் தூதர் அவரை வழிமறித்தார் .






கழுதை வாய் திறந்து பேசியது. “நீ மும்முறை அடிக்க நான் என்ன தவறு செய்தேன்?” என வினவிய போதே, பிலயாம் கடவுளின் தூதரைக் கண்டு, அவர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு, தான் திரும்பி சென்றுவிடுவதாக கூறினார். அப்போது தூதர், சென்று தூற்றுவதற்கு பதில் இஸ்ராயேலரை புகழச் சொல்ல, அவர் பணித்தவாறே செயலாற்றினார்.

பிலயாமின் உயிர் அவர் கழுதையால் காப்பாற்றப்பட்டது. பிள்ளைகளே நாமும் கடவுளுக்கு பிரியமானதை செய்வோம். நேர்வழி செல்வோம்

“நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக!” (மத் 8 : 1-4)

# குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**மேலிருந்து கீழ்**

1 : மின்னலுக்கு பின் வருவது இது.
2 : இயேசுவை காட்டி கொடுத்தவன். (த.கீ)
5 : முடியப்பர் இதனால் எறிந்து கொல்லப்பட்டார். (த.கீ)
12 : அன்னை மரியாள் இன்றுவரை இப்படியே அழைக்கப்படுகிறார். (குழம்பியுள்ளது)
16 : இயேசு இதனை நல்ல இரசமாக்கினார். (தலைகீழாய் உள்ளது)
24 : இயேசு இதன் மீது நடந்தார்.
26 : முக்கனிகளில் ஒன்று.
29 : அழுத பிள்ளை இதனை குடிக்கும்

**இடமிருந்து வலம்**

1 - இறைவனால் தேர்ந்துகொண்ட இனம்.
7 - சில ஆண்கள் தம் முகத்தில் அழகுக்காய் இதை வளர்ப்பர். (இடம்மாறியுள்ளது)
11 - சாத்தான் ஏவாளை இதனை உண்ணச் சொல்லி வஞ்சித்தான். (இடம்மாறியுள்ளது)
14 - இயேசு “இவர்களின் அரசர்” என்று பரிகசிக்கப்பட்டார்.
19 - “இதனால் சுட்ட வடு ஆறாது“ என்று பழமொழி உண்டு.
28 - கோதுமையால் செய்யப்பட்ட நம் நாட்டின் அன்றாட உணவு. (இடம்மாறியுள்ளது)
31 - “கூப்பிடுதல்“ என்றும் கூறலாம்.

## குறுக்கெழுத்துப்போட்டி

**முன்னைய இதழின் விடைகள்**

**மேலிருந்து கீழ்**

| | |
|---|---|
| 1. | அனனியா |
| 3. | கனி |
| 6. | பேதுரு |
| 14. | பக்கம் |
| 16. | புலி |
| 21. | கோதுமை |
| 30. | பலா |

**இடமிருந்து வலம்**

| | |
|---|---|
| 1. | அகந்தை |
| 11. | காது |
| 13. | பனி |
| 19. | யாக்கோபு |
| 29. | விலா |
| 32. | இம்மை |

## “தாய்” வாசக நெஞ்சங்களே!

**தற்போது “தாய்” சஞ்சிகையை www.colombostjosephvazmandram.lk என்ற இணையதளத்தின் ஊடாகவும் நீங்கள் காணலாம் என்பதை அறியத் தருகின்றோம். இதன்மூலமாக வெளிநாட்டில் உள்ளவர்களும் இத் தாய் சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.**

## நற்செய்திப் பெருவிழா

கடந்த வருடத்தை போன்று இவ்வருடமும் ஜூலை 8 முதல் 13 வரை நற்செய்தி பெருவிழாவானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திங்கள் முதல் வெள்ளிவரையான நாட்களில் ஆலயங்களிலும், சனிக்கிழமை இரவு திருவிழிப்பாகவும் இது அமையும். மேலதிக விபரங்கள் எதிர்வரும் தாய் சஞ்சிகையில் அறிவிக்கப்படும். இம்முறை நற்செய்திப் பெருவிழாவை வழிநடத்த இந்தியாவில் இருந்து அருட்தந்தை வர்கிஸ் அடிகளார் வருகை தர உள்ளார்.

இவரது மறையுரைகளை youtube இல் பார்க்கலாம். மேலதிக விபரங்களை அறிய பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளலாம்.



0774985940, 0777487562

## கூட்டொருங்கியக்கத்தின் .....

றானர் (*Karl Rahner*) இளைய இறையியலாளரும், எமது மறைந்த திருத்தந்தையுமான ரட்சிங்கன் எனப்படும் 16ம் பெனடிக்ற் என்போர் பாரிய புதிய வழித் திருஅவைக்கான கனவை உட்புகுத்தியவர்கள் ஆவர். இதன் பின்னணியில் மாநாட்டை கூட்டிய திருத்தந்தை, கூடியிருந்த அத்தனை ஆயர்களையும் நோக்கி திருஅவையின் மூடிய கதவுகளையும், யன்னல்களையும் திறந்து புதிய காற்றை சுவாசிக்க அனுமதி அளிக்க கேட்டுக் கொண்டு தூய ஆவியின் குரலுக்கு செவிமடுக்கவும். திருஅவையின் இரண்டாம் பெந்தகோஸ்தே அனுபவம் பெற வழிகாட்டியாகவும் அமைந்தார்.

ஒரு சிறிய கால கட்டத்தோடு ஏட்டளவில் தேங்கி நிற்கும் சமய அறிவில் இருந்து வளர்ந்து செல்லும் கொள்கைகளை நோக்கி வழிநடப்பட்ட இறைவனும் திரு அவைத் தலைவர்களும் காரணமாவதால் மூன்று ஆண்டுகள் திருச்சங்க அமர்வுகள் நீண்டு சென்று புதிய வழி திருஅவையை பெற்றெடுத்தது. வேகமான முடிவுகள் நிறுத்தப்பட்டு, நிதானமான கலந்துரையாடல் கலந்த, புதிய சிந்தனைகளைப் பெறும் கருத்தாடல்கள் மூலமாக பயணித்து வெற்றி கண்டது. ஏற்றங்கள், குழப்பங்கள் மத்தியிலும் நிதானமான முடிவுகளை எட்டியது. கொள்கைத் திரட்டுக்கள் மேய்ப்புப்பணி சார்புகளைப் பெற்றது.

திருநிலையினருக்கு சமாந்தரமான பணிப்பொறுப்புக்களை பொதுநிலையினரும் பெற்றனர். மாற்றங்களை சுட்டிக்காட்டி புதிய வழியில் சிந்திக்கத் தூண்டியது. பாரம்பரிய பிரமிட்டு வடிவிலான முடிவு எடுப்புக்கள் இறைமக்களின் பிரசன்னத்தில் இருந்து உயிர் பெறத் தொடங்கியது. இணைந்து கலந்துரையாடி முடிவெடுத்து திட்டம் தீட்டும் புதிய வழியை திருஅவை கண்டது. முடிவெடுத்தலில் பொதுமைத் தன்மை பேணப்பட்டது.
இவற்றின் அடிப்படையில் எமது திருத்தந்தையும் புதிய வழி சிந்தனையுடன் பயணிக்க இம்மாநாட்டை கூட்டுகிறார். நாமும் இப்புதிய “ கூட்டொருங்கியக்கத்தின் சிந்தனைகளை உள்வாங்க தயாராகுவோம்”

(வளரும்)

## புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய.......... பக்கம் 13ன் தொடர்ச்சி..

புதுச்செட்டித்தெரு, புனித வியாகுலமாதா ஆலயத்தில் பழமை வாய்ந்த கல்லரை ஆண்டவர் சுரூபத்திற்கானதும், புதிதாக ஆலய திருவிழா பவனிக்காக செய்யப்பட்ட புனித வியாகுலமாதாவின் புதிய சுரூபத்துக்குமானதுமான புதிய அமைவிடமானது பங்குத்தந்தை அருட்பணி. பீட்டர் சுபராஜ் அடிகளாரால் நிர்மானிக்கப்பட்டு அருட்பணி. ஜோய் மரியரட்ணம் அடிகளாரால் பெரிய வியாழன் திருப்பலியின் இறுதியில் (28/03/2024) ஆசீர்வதிக்கப்பட்டது.

படம் 01ல் இவ்வமைவிடத்தையும் படம் 02ல் ஆலய பீடத்தின் அன்மைக் காலத்தில் புதிதாக அமைக்கபட்ட தோற்றத்தையும், படம் 03ல் ஆலயம் முன்பாக அமைக்கப்பட்டுள்ள சிலுவை மற்றும் அதன் அருகில் வியாகுலமாதா சுரூபத்தையும் படத்தில் காணலாம்.

## பொருளுள்ள ஞாயிறு .....

மக்களுக்குத் தகுந்த விளக்கமும் பயிற்சியும் அளிக்கப்பட்ட பின்னரே, இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

### 5. பீட வணக்கம்

ஞாயிறு மற்றும் பெருவிழா நாள்களில் குரு பீடத்திற்கு வந்ததும் முதலில் அதற்குத் தூபமிடுகிறார். அதைத் தொடர்ந்து, பீடத்தைத் தம் கைகளால் தொட்டு, கைகளை நெற்றியில் அல்லது கண்களில் ஒற்றிக் கொள்கிறார். ஏனெனில் பலி பீடம் கிறிஸ்துவைக் குறிக்கிறது: “அவரே (கிறிஸ்துவே) குருவாகவும், பலி பீடமாகவும், செம்மறியாகவும் விளங்கினார்” (காண். பாஸ்கா தொடக்கவுரை, எண் V). எனவே “பலி பீடம்” என்பது கிறிஸ்துவைக் குறிக்கிறது; அது பலியிடுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். வேறு எதற்கும் அதைப் பயன்படுத்தக் கூடாது. எனவே திருப்பலிக்குத் தேவையான திருப்பலிப் புத்தகம், திருமேனித் துகில், திருப்பாத்திரங்கள், திருமேனித்தட்டு போன்றவை மட்டுமே பீடத்தின் மேல் வைக்கப்பட வேண்டும் *(GIRM 306).*

ஆகவேதான் “பூக்கள் கூட பீடத்தின் மேல் அல்ல; அதன் அருகில் வைக்கப்பட வேண்டும்” *(GIRM 305)* என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இயற்கையான, உண்மையான மலர்களுக்குப் பதிலாக, செயற்கையான “பிளாஸ்டிக்” பூக்களைப்பயன்படுத்தக் கூடாது. மேலும் இயற்கையான, மலர்களுக்குப் பதிலாக, செயற்கையான “பிளாஸ்டிக்“ பூக்களைப் பயன்படுத்தக் கூடாது. மேலும் திருப்பலியில் காணிக்கையின் போதுதான் அப்பம், இரசம், திருப்பாத்திரங்கள், திருப்பலி நூல் ஆகியன பீடத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும் மாறாக, திருப்பலி தொடங்கும் முன்னரே அவற்றைத் திருப்பலி பீடத்தின்மீது வைத்து விடுவது சற்றும் பொருந்தாத செயல்பாடு ஆகும்.
இன்னும் பலி பீடத்தின் மீது “செல்போன்”, அறிக்கை நோட்டுகள், திருமண அறிவிப்பு நோட்டுகள் போன்றவற்றை வைப்பதும் கூடாது. மேலும் ஒரு சாதாரண மேசை போன்று திருமணப் பதிவேடு, திருமுழுக்குப் பதிவேடு, துறவற வார்த்தைப்பாட்டின் போது “வாக்குறுதித் தாள்” போன்றவற்றில் கையொப்பம் இடுவதற்காகப் பயன்படும் சாதாரண மேசையாக நாம் பலி பீடத்தை மாற்றிவிடக்கூடாது.


தொடரும்...

## கிராண்பாஸ் புனித சூசையப்பர் பங்கின்...

கிரான்பாஸ், புனித சூசையப்பர் ஆலய பங்கின் நூலக திறப்பு விழாவானது 11/02/2024 அன்று காலை 9.45 மணியளவில் துணை ஆயர் மேதகு அன்டன் ரஞ்சித் ஆண்டகை அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.
பங்குத்தந்தை அருட் பணி ஜுட்ராஜ். துணை பங்குத்தந்தை அருட்பணி ஜுட் ரவீந்திரன், அருட்பணி செபஸ்தியன் (புனித அந்தோனியார் ஆலயம்.மாவத்தை)
அருட் சகோதரர் அன்றூ ஆகியோரை படத்தில் காணலாம்.



“உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்!” (1 அரசர்கள் 3:4-13)



# Happy 25th Wedding Anniversary

## Jerome Lazarus
## &
## Peramila Anastasia

இறைவன் அருளால் இன்பம் பொங்க.
இருகரம் இணைந்து இல்லறம் சிறக்க.
இன்னும் 100 ஆண்டுகள்
இம்மண்ணில் வாழ
என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!...

2024 / 02 / 06




# Happy 55th Birthday Appa
# God Bless You Appa



## Jesudasan

நெஞ்சம் கவர்ந்த நாயகனே !
நினைக்கையில் பொங்கிடுமே
உவகை பெருவெள்ளம்.
நிறைந்திடுமே நெஞ்சமெல்லாம்
உங்கள் பிள்ளை என்ற பெருமிதம்.
பேசும் ஒரு சொல்லில் கொட்டிடுமே பாசமழை.
ஆண்டுகள் பல ஆனாலும்
அதிகரிக்குமே ஆனந்தமே !
அப்பா உங்களின் அழகு முகம் பார்த்ததும் ,
உங்களால் நான் பெற்ற பாக்கியம்
என்னென்று உரைத்திட கூடுமோ !
செந்தமிழின் மழலைபோல்,
பெருமைபோல், வளமைபோல்,
இளமைபோல், அழகைபோல், வாழியவே !
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் அப்பா.

06 / 04 / 2024




“மறை வளர ஒன்றிணைவோம்”

இச்சஞ்சிகை அருட்பணி. ஆனந்த பெர்னாண்டோபுள்ளே அடிகளாரால் 01.04.2024 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

*Printed by : JRCA Digital Graphic (Pvt) Ltd., No. 78, Brass Founder Street, Colombo - 13. :077 177 6646 : 075 777 6646*